**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண். 113 /2024 நாள்: 29.07.2025

வா.த.சா:– 1 தியாகராஜன் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை ( மனுவின் பெயரில் வாசா 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில்):–

என் தாத்தா மாணிக்கசுந்தரம் அருள்மிகு சொக்கநாச்சியம்மன் நஞ்சை கிளாம்பாடி கிராமத்தில் சொந்தமானது என்பது குறித்து கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் முன்பு ஆஜரானார் என்று குறிப்பிட்டுள்ளேன். அந்த தாசில்தார் வழங்கிய உத்தரவுக்கு எதிராக 6 மாத காலத்திற்குள் நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு படி அரசாங்கத்திற்கு பணம் செலுத்தியதாகவும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு அடிப்படையில் சொத்து எங்களுக்கு பாத்தியப்படவில்லை என்றால் சரிதான். பட்டா கோவில் பெயரில் தான் கொடுத்துள்ளார்கள். இந்த சொத்து சொக்கநாச்சியம்மன் கோவிலுக்கு சொந்தமானது என்பதை பொருத்து ஆட்சேபனை இல்லை என்றாலும் கோவிலை பராமரிப்பு செய்வதற்கு ஊழியம் செய்வதற்காக எனது தாத்தாவிற்கு வழங்கப்பட்ட சொத்து என்றாலும் அதை குறித்து அவ்வாறு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. 200 வருடங்களாக தாவா சொத்தின் அனுபவம் எங்கள் குடும்பத்திடம் தான் உள்ளது. 150 வருடங்களுக்கு முன்பு என் தாத்தாவின் தாத்தா கிரயம் வாங்கியுள்ளார். அரசு மாவட்ட ஆட்சியர் அவர்களால் பராமரிக்கப்படும் வருவாய் ஆவணங்களின் படி தாவா சொத்து சொக்கநாச்சியம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமானது என்றால் பட்டா கோவில் பெயரிலிருந்தாலும் 200 வருடங்களாக சுவாதீன அனுபவம் எங்களிடம் தான் உள்ளது. மைனர் இனாம் ஒழிப்புச்சட்டம் மற்றும் ரயத்துவாரி மாற்றுச் சட்டத்தின் படி எவ்வித உரிமையும் தாவா சொத்தை பொருத்து நாங்கள் கோரவில்லை என்றால் சரிதான்.

Copy of Deposition

அதனால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தானது திருக்கோவிலுக்கு ஊழியம் செய்வதற்காக கொடுக்கப்பட்ட இனாம் சொத்து என்பதால் ஒருபோதும் வேறு நபர்களுக்கு உரிமை மாற்றம் செய்ய இயலாது என்றால் ஊழியம் செய்வதற்காக இனாமாக கொடுத்த நிலம் அல்ல. திருக்கோவில் சொத்து பொருத்தவரை நீடனுபோகம் என்ற வரையறைக்குள் வராது என்றாலும் திருக்கோவில் பயன்பாட்டிற்காகவும் பொதுமக்கள் நலனிற்காக பயன்படுத்தும் சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்தானது திருக்கோவில் ஊழியம் செய்யாதபட்சத்தில் எங்களுக்கு அனுபவ உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் திருக்கோவில் சொத்தை என்னுடைய முன்னோர்கள் சொத்து என்று பாகப்பிரிவினை செய்துக் கொள்ள உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. திருக்கோவில் சொத்தை மறைத்து கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 1893/1950 என்று 01.11.1950ல் பதிவு செய்யப்பட்டுள்ள பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ஈரோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் 15.02.1960 அன்று பாகப்பிரிவினை ஆவண எண் 444/1960 என்று பதியப்பட்டதும் திருக்கோவில் சொத்து என்பதை மறைத்து பதியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை குறித்து அசல் வழக்கு எண். 307/1971 வழக்கு தாக்கல் செய்து இறுதியில் சமரச அடிப்படையில் தீர்வு பெற்றதும் அருள்மிகு சொக்கநாச்சியம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டதை மறைத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 20/1997 ல் தொடரப்பட்டு அதை தொடர்ந்து மேல் முறையீடு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மேல்முறையீட்டு வழக்கு எண். 563/2003 சமரச உடன்படிக்கையில் பெறப்பட்ட சொத்தும் அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதை மறைத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. இந்த சொத்து முழுவதும் அருள்மிகு சொக்கநாச்சியம்மன் கோவிலுக்கு சொந்தமானது மேற்படி கோவில் நிர்வாகம் முறையாக கோவிலை பராமரித்து வருகிறது. தாவா சொத்தை பொருத்தும் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் அருள்மிகு சொக்கநாச்சியம்மன்

## Copy of Deposition

திருக்கோவிலுக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றாலும் இந்த சொத்தை பொருத்தவரை சட்டத்திற்கு புறம்பாக பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>Sd xxx P. Sridevi<br>Subordinate Judge,<br>Kodumudi |